# *WHAT KIDS WANTSTHEIR PARENTS TO KNOW*

# பெற்றோர்களிடம் குழந்தைகள் எதிர்பார்ப்பது என்ன?

# WHAT KIDS WANTS THEIR PARENTS TO KNOW

| | WHAT KIDS WANTS THEIR PARENTS TO KNOW | பெற்றோர்களிடம் குழந்தைகள் எதிர்பார்ப்பது என்ன? |
|---|---|---|
| 1 | Encourage me when I do a good job | நான் நல்ல வேலையைச் செய்யும்பொழுது என்னை ஊக்கப்படுத்துங்கள் |
| 2 | Let me teach you some things. Don't always be the teacher | நான் உங்களுக்கு சில விஷயங்களைக் கற்றுக் கொடுக்க அனுமதியுங்கள். எப்பொழுதும் நீங்களே கற்றுக் கொடுப்பவராகவே இருக்காதீர்கள். |
| 3 | Don't show too much affection in public | பொது இடங்களில் உங்களின் அதிகப் பாசத்தை வெளிப்படுத்தாதீர்கள். |
| 4 | Let me take some risks; you did when you were young. | உங்கள் இளம் வயதில் நீங்கள் செய்ததைப் போன்றே என்னையும் சில சோதனைகளை மேற்கொள்ள விடுங்கள். |
| 5 | Try not to miss my ball games, school plays or the other activities that are special to me | நான் அதிகம் விரும்பும் நடவடிக்கைகளான பந்து விளையாட்டுக்கள், பள்ளி விளையாட்டுக்கள் போன்றவற்றை இழக்கச் செய்யாதீர்கள். |
| 6 | Respect my Privacy | என் தனிமைக்கு மதிப்பளியுங்கள் |
| 7 | Say "YES" more often than "NO" | "இல்லை" அல்லது "வேண்டாம்" என்பதைவிட "சரி" "செய் " என்பதை அதிகம் பயன்படுத்துங்கள் |
| 8 | Take me on short errands with you if I want to go | சிறிய காரியங்களுக்காக நீங்கள் செல்லும்போது, நான் விரும்பினால் என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள் |
| 9 | Getting a pet is a great idea | எனக்கு ஒரு செல்லப் பிராணியை அளிப்பது மிக்க மகிழ்ச்சி அளிக்கும |
| 10 | Set limits on the amount of television I watch | நான் பார்க்கக் கூடிய தொலைக்காட்சியின் தன்மைகளை நிர்ணயித்துச் சொல்லுங்கள் |
| 11 | Help me to develop a skill or talent that will last a liftetime | வாழ்நாள் முழுமைக்கும் நிலைக்கும் திறனை அல்லது சிறப்பு ஆற்றலை நான் பெற உதவுங்கள் |
| 12 | Give me reasons for your demands | உங்களின் எதிர்பார்ப்புகளுக்கு என்னிடம் காரணம் கூறுங்கள். |
| 13 | Family activities really make me feel close to everyone. | எனக்கு இடும் குடும்பவேலைகள் என்னை எல்லோரிடமும் நெருக்கமான உணர்வை உணரச் செய்கிறது. |
| 14 | Take time to explain things to me. | நல்ல விஷயங்கள் எனக்கு விளக்க நேரம் ஒதுக்குங்கள் |
| 15 | Don't take it personally when I act weird… sometimes I feel weird. | சில சமயம் நான் விசித்திரமாக உணர்கிறேன். எனவே நான் விசித்திரமாக நடந்து கொள்வதை தங்கள் மனதில் கொள்ளாதீர்கள். |
| 16 | Hang out with me sometimes | சில சமயங்களில் என்னைவிட்டு அண்டியிருங்கள் |
| 17 | Understand that I don't try to make you mad; it just happens. I don't like being on your bad side. | சில சமயங்களில் நான் நடந்து கொள்வது தங்களைக் கேலி செய்வதுபோல் இருக்கலாம். என்னை அறியாமலே நடந்து விடுகிறது. இதை ஒரு பொருட்டாக எண்ணாதீர்கள். |
| 18 | Please stop showing pictures of me to everyone you meet. This is very embarrassing. | என் புகைப்படத்தை நீங்கள் சந்திக்கும் நபர்களிடமெல்லாம் காண்பிக்காதீர்கள். இது எனக்கு தர்ம சங்கடத்தைக் கொடுக்கிறது. |
| 19 | Tell me what's going on with family problems or any other problems. It hurts me when I know that I'm not being included. | குடும்ப பிரச்சினைகள் அல்லது மற்ற பிரச்சினைகள் பற்றியும் என்ன நடக்கிறது என்பதை என்னிடம் சொல்லுங்கள். இவற்றை என்னிடம் தவிர்த்தால் பின்னர் தெரிய வரும்பொழுது என் மனம் மிகவும் புண்படுகிறது. |
| 20 | Board games can be fun to play with the family. | பலகை விளையாட்டுக்கள் குடும்பத்துடன் விளையாடுவது மனமகிழ்வாக இருக்கும். |

| | | |
|---|---|---|
| 21 | Keep your word. | நீங்கள் சொன்ன வாக்குறுதிகளைக் காப்பாற்றுங்கள் |
| 22 | Keep praying for me. It makes me feel secure. | எனக்காக பிரார்த்தனைகள் செய்து கொண்டிருங்கள். அது எனக்கு பாதுகாப்பு உணர்வை மிகவும் தருகிறது |
| 23 | Ask for forgiveness of me sometimes. | சில சமயங்களில் என் மன்னிப்பை கேட்டுப் பெறுஙகள் |
| 24 | Don't always give me what I keep asking you for. | நான் கேட்டுககொண்டு இருப்பதைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்காதீர்கள் |
| 25 | Make sure you listen to my answers when you ask me questions. | நீங்கள் கேள்வி கேட்கும்பொழுது, நான் சொல்லும் பதிலை உன்னிப்பாகக் கேளுங்கள் |
| 26 | Listening is one of the best ways to show me you love me. | என்னிடம் நீங்கள் காட்டும் அன்பை வெளிப்படுத்தும் சிறந்த வழி நீங்கள் என்னைக் கவனித்துக் கேட்பதுதான் |
| 27 | If I spend a lot of time on the phone with my friends, don't get worked up. | என் நண்பர்களுடன் அதிக நேரம் தொலைபேசியில் நான் பேசினால் அதை கண்டுகொள்ளாதீர்கள் |
| 28 | Stop comparing me to my brothers or sisters or to my classmates. We are all different and want to be treated as individuals. | என்னை, என் சகோதரர்கள் அல்லது சகோதரிகள் அல்லது என் வகுப்பு நண்பர்களுடன் ஒப்பிடாதீர்கள். நாங்கள் அனைவரும் மாறுபட்டவர்கள். எங்களைத் தனித் தனியாகத்தான் பாவிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன |
| 29 | If I lose at something, let me have some time to myself. Later you can tell me what I did wrong.. And what I did right. | நான் ஏதேனும் இழந்தால் அதற்காக சிந்திக்க எனக்கு அவகாசம் கொடுங்கள். பின்னர் நான் செய்த தவறு என்ன, நான் செய்த சரியான செயல் என்ன, என்பததை என்னிடம் சொல்லுங்கள். |
| 30 | Always buy me clothes that are in fashion not something you would wear. | எனக்காக எப்பொழுதும் நவீன நாகரீக உடைகளை வாங்குங்கள். நீங்கள் அணிய விரும்புவதை வாங்காதீர்கள். |
| 31 | I enjoy seeing my parents hug. | பெற்றோர்களாகிய உங்களின் அன்பான அரவணைப்பை நான் விரும்புகிறேன். |
| 32 | Don't make fun of the music. I listen to or the clothes I wear. | நான் விரும்பும் இசையையோ அல்லது உடைகளையோ கேலி செய்யாதீர்கள் |
| 33 | Set high moral standards for me. | மிக உயர்ந்த நற்பண்புகளை எனக்கு உணர்த்துங்கள் |
| 34 | Wear your seat belt while driving the car. You are important to me. | நீங்கள் எனக்கு முக்கியமானவராக இருப்பதால் காரை ஓட்டும்பொழுது இருக்கை பட்டையை அணியுங்கள் |
| 35 | Keep telling me you love me and are proud of me. | நீங்கள் என்னை விரும்புவதையும், என்னைப்பற்றி பெருமைப்படுவதையும் அடிக்கடி சொல்லிக் கொண்டிருங்கள் |
| 36 | Teach me how to act around elders. | பெரியவர்களிடம் எப்படி நடந்து கொள்வது என்று எனக்கு கற்பியுங்கள் |
| 37 | Never put me down, especially in front of my friends. | என் நண்பர்கள் முன்னிலையிலும், வேறு எப்பொழுதும் என்னைத் தாழ்வு படுத்தாதீர்கள |
| 38 | Talk to me about all subjects even sensitive ones. I need information. | எனக்குத் தகவல் தேவைப்படுவதால் எல்லாப் பொருட்களைப் பற்றியும், அவை உணர்வுப் பூர்வமானவையாக இருந்தாலும் என்னிடம் பேசுஙகள். |
| 39 | Encourage me to earn my own money. | எனக்குத் தேவையான பணத்தை நானே சம்பாதித்துக்கொள்ள என்னை ஊக்கப்படுத்துங்கள் |
| 40 | Keep pushing me to learn how to express myself in words, both written and spoken. It really does help me to think better. | எழுத்தாலும், பேச்சாலும் வார்த்தைகளால் என்னை நானே எப்படி வெளிப்படுத்திக் கொள்வது என்று எனக்கு கற்பியுங்கள். என் சிந்தனைகள் சிறப்படைய இது உண்மையிலேயே உதவும். |
| 41 | Pray with me. | என்னுடன் சேர்ந்து பிரார்த்தனை செய்யுங்கள |
| 42 | Teach me about different religions,cultures and races. | பல மதங்கள், கலாச்சாரங்கள், இனங்கள் பற்றி எனக்கு கற்பியுங்கள் |
| 43 | Get to know my friends. Include them in some of our family plans. | என் நண்பர்களைத் தெரிந்து கொள்ளுங்கள். நம் குடும்ப வைபவங்கள் சிலவற்றில் அவர்களையும் சேர்த்துக் கொள்ளுஙகள |
| 44 | Discuss movies after we see them. This teaches me to evaluate things. | திரைப்படங்களைப் பார்த்த பின்னர் அவற்றைப் பற்றி |

| | | |
|---|---|---|
| | | கலந்துரையாடுங்கள். இதனால் விஷயங்களை அலசுவது பற்றி நான் கற்றுக கொள்ள முடியும |
| 45 | Don't tell me my fears are silly. | என்னுடைய பயங்கள் மடமையானவை என்று என்னிடம் சொல்லாதீர்கள் |
| 46 | Let me express myself through my hair and clothes. | என்னுடைய முடி அலங்காரத்திலும், உடையிலும் என்னை நான் வெளிப்படுத்திக் கொள்ள விடுங்கள் |
| 47 | Even though I complain about Maths lessons, make me stick with them. | நான் கணக்குப் பாடத்தைக் குறை கூறினாலும் அதில் பற்றுதலாக இருக்கச் செய்யுங்கள் |
| 48 | Keep encouraging me to follow my dreams. Mine are different than yours. | என் கற்பனைகள் உங்கள் கற்பனைகளிலிருந்து வேறுபட்டவை. என் கற்பனைகளைத் தொடர ஊக்கமளியுங்கள |
| 49 | Encourage me to save and not to buy things so quickly. | அவசரப்பட்டு பொருட்களை வாங்கி விரையம் செய்யாமல், பணத்தை சேமிக்க ஊக்கப்படுத்துங்கள் |
| 50 | Encourage me to be honest. | நேர்மையாக நடக்க ஊக்கப்படுத்துங்கள் |
| 51 | Don't keep changing the rules. | அடிக்கடி நடைமுறைகளை மாற்றாதீர்கள் |
| 52 | Make sure I have a quiet place and a regular time to do homework. | என்னுடைய வீட்டுப்பாடங்களை செய்ய அமைதியான இடத்தையும், நேரத்தையும் நான் பெற்றுள்ளேனா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள |
| 53 | Trust me. | என்னை நம்புங்கள் |
| 54 | Nagging doesn't work in the long run | என்னிடம் அடிக்கடி குற்றங்கள் கண்டுபிடிக்காதீர்கள் |
| 55 | I can't always get good grades- sometimes I get nervous and make mistakes. | என் பய உணர்வால் சிலசமயம் நான் தவறுகள் செய்வதால் எப்பொழுதும் நல்ல மதிப்பெண்களை என்னால் பெறமுடியவில்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள் |
| 56 | Don't push me into a specific sport. Introduce me to lots of activities and let me choose what I like. | குறிப்பிட்ட விளையாட்டில் என்னைத் திணிக்காதீர்கள். பல்வேறு செயல்பாடுகள் பற்றி எனக்கு தெரிவியுங்கள். அவற்றில் நான் விரும்புவதை தேர்ந்தெடுக்க விடுங்கள |
| 57 | Teach me to be kind. | அன்புடன் நடக்க கற்பியுங்கள |
| 58 | Don't correct my mistakes in front of my friends. Save your criticisms until we are alone. | என் குறைகளை என் நண்பர்கள் முன்னிலையில் விமர்சனம் செய்து சரிப்படுத்தாதீர்கள். நமக்கு தனிமை கிடைக்கும்வரை உங்கள் விமர்சனங்களை ஒதுக்கி வைத்திருங்கள் |
| 59 | Arguments are a natural part of being a family. | குடும்பமாக இருக்கும்போது சிற்சில விவாதங்கள் எழுவது இயற்கை |
| 60 | Don't begin sentences with "When I was your age…". | " உன்னுடைய வயதில் நான் இருந்தபொழுது " என்று பேச்சை ஆரம்பிக்காதீர்கள் |
| 61 | Let me be independent and learn to govern myself. I'll do the driving; you do the navigating. | என்னை சுதந்திரமாக, நானே என்னை ஆட்சி செய்து கொள்ள விடுங்கள். என் பாதையில் என்னை செல்ல விடுத்து, பின்பு என்னை சரிப்படுத்துங்கள |
| 62 | Have atleast one meal as a family each day. | ஒரு நாளில் ஒருமுறையாவது குடும்பத்துடன் உணவருந்துங்கள் |
| 63 | Ask open - ended questions, it helps me solve my own problems. | என் சொந்த பிரச்சனைகளைத் தீர்க்கும் வண்ணம் வெளிப்படையான கேள்விகளை கேளுங்கள் |
| 64 | Tell me about our family history - it makes me proud. | நம் குடும்ப சரித்திரத்தை எனக்குச் சொல்லுங்கள். அது என்னைப் பெருமையுறச் செய்கிறது |
| 65 | Set clear, consistent boundaries. | தெளிவான, முரண்பாடில்லாத வரைமுறைகளை ஏற்படுத்துங்கள |
| 66 | Share the experiences that you had as a kid-even the mistakes and embarrassing times. | உங்களின் இளமைக்கால அனுபவங்களைச் சொல்லுங்கள். அதில் நிகழ்ந்த தவறுகள், தடுமாற்றங்களையும் என்னிடம் மறைவின்றி கூறுங்கள் |
| 67 | Tell me when you're in a bad mood or are having a bad day. That way I won't be so hurt if you say something dumb. | உங்களுக்கு மனநிலை சரியில்லையென்றாலோ, அன்று ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டிருந்தாலோ என்னிடம் தெரிவித்துவிடுங்கள். ஏனெனில் என் மனம் துன்புறும் வண்ணம் நீங்கள் ஏதேனும் சொல்லினும் நான் அதனால் |

| | | |
|---|---|---|
| | | பாதிப்படையாமல் இருப்பேன். |
| 68 | I like us to go to the temple together as a family. | நாம் எல்லோரும் சேர்ந்து குடும்பமாக கோவிலுக்குச் செல்வதை நான் விரும்புகின்றேன். |
| | | |
| 69 | Set a good example for me when it comes to habits like smoking or dinking. | புகைபிடித்தல், குடித்தல் போன்ற கெட்ட பழக்கங்களில் ஈடுபடாதிருக்க நீங்களே நல்ல உதாரணமாக நடந்து கொள்ளுங்கள். |
| 70 | Remember I can't read your mind. | உங்கள் மனதை நான் முன்கூட்டியே அறிய முடியாது என்பதை நினைவு கொள்ளுங்கள். |
| 71 | Teach me to keep trying. | முயற்சி செய்து கொண்டே இருக்க பயிற்றுங்கள் |
| 72 | I may need rules, but not too many. | எனக்கென்று சில நெறிமுறைகள் தேவைப்படலாம். ஆனால் எண்ணற்ற நெறிமுறைகளை நான் தாங்க இயலாது |
| 73 | When I am with my friends, don't always try to hang out with us. You and I can spend time together later. | நான் நண்பர்களுடன் இருக்கும்பொழுது எப்பொழுதும் எங்களுட்ன இருக்க முயற்சிக்காதீர்கள். நீங்களும் நானும் பிறகு ஒன்றாக சேர்ந்து காலத்தை கழிக்கலாம் |
| 74 | Let me decide my own bedtime. | நான் படுக்கும் நேரத்தை நானே முடிவு செய்யய அனுமதியுங்கள் |
| 75 | Occasionally I still like to be kissed by both of my parents. | எப்பொழுதாவது என் பெற்றோர் இருவரும் என்னை கொஞ்ச வேண்டும் என்று இன்னும் நான் விரும்புகிறேன |
| 76 | Cheer for my whole team, not just for me. | என்னை மட்டுமின்றி என் நண்பர்கள் குழு முழுமைக்கும் சந்தோஷமளியுங்கள் |
| 77 | Know what I am watching on T.V. I am really not old enough to see somethings. | நான் தொலைக்காட்சியில் என்ன பார்க்கிறேன் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். சிலவற்றை பார்க்கும் அளவிற்கு உண்மையில் எனக்கு வயதாகி விடவில்லை |
| 78 | Your praise means more to me than anyone else's. | மற்றவர்களுடையதை விட உங்களின் புகழுரை தான் எனக்குப் பெரியது |
| 79 | Make sure that my friends feel welcome at our house. | நம் வீட்டில் நன்கு உபசரிக்கப்படுவதாக என் நண்பர்கள் உணரும்படி நடந்து கொள்ளுங்கள். |
| 80 | Don't say things you don't mean when you are angry. | நீங்கள் கோபமாக இருக்கும்பொழுது நீங்களே விரும்பாத வார்த்தைகளை பயன்படுத்தாதீர்கள் |
| 81 | Sometimes discuss problems with me when you don't know the solutions. | உங்களுக்கு விடை கிடைக்காத பிரச்சினைகளை சில சமயங்களில் என்னுடன் விவாதியுங்கள் |
| 82 | Instead of giving orders, Offer choices. | கட்டளைகளை இடுவதைவிட, மாற்று முறைகளையும் அளியுங்கள் |
| 83 | Never, Never call me by my pet name in public. | எப்பொழுதும், எந்த சமயத்திலும் என் செல்லப் பெயரால் பொதுவிடங்களில் அழைக்க வேண்டாம் |
| 84 | Give me more responsibilites as I prove myself ready. | நான் தகுதியானவன் என்பதை நிரூபிக்க எனக்கு அதிகமான பொறுப்புகளை கொடுங்கள் |
| 85 | Let me decorate my own room, but you can give me advice. | என் அறையை நானே அலங்கரிக்க விடுங்கள். அதற்கு நீங்கள் எனக்கு அறிவுரை கூறலாம். |
| 86 | Encourage me to start a collection of something interesting. | ஆர்வமிக்க ஏதேனும் ஒரு பொருளை சேகரிக்க என்னை ஊக்கப்படுத்துங்கள் |
| 87 | Teach me good manners. | நற்பண்புகளை எனக்கு போதியுங்கள் |
| 88 | Rent videos with a message for the family to watch. | குடும்பத்திற்கு உதவும் நல்ல கருத்துக்களைத் தரக்கூடிய நல்ல வீடியோக்களையே வாடகைக்கு எடுங்கள் |
| 89 | Be aware of the music I listen to. Take the time to introduce me to other types of music. | நான் விரும்பிக் கேட்கும் இசைகளை தெரிந்து கொள்ளுங்கள். சமயம் கிடைக்கும்பொழுது மற்ற இசைகளையும் எனக்கு அறிமுகப்படுத்துங்கள |
| 90 | Teach me to compare prices before buying. | வாங்கும் முன் விலையை ஒப்பிட்டுப் பார்க்க எனக்கு கற்பியுங்கள் |
| 91 | Read the newpaper with me sometimes and discuss what's going on. | செய்தித்தாளை சில சமயங்களில் படித்து என்ன நடக்கிறது என்பதை என்னுடன் விவாதியுங்கள் |
| 92 | Let me go to the movies with a | என்னை நண்பர்களுடன் திரைப்படங்களுக்குச் செல்ல |

| | | |
|---|---|---|
| | friend. We will get the tickets and the food and meet you later. | விடுங்கள |
| 93 | Always make time for me. We can sit around and talk, read a book, or do something else. The important thing is that you like to spend time with me. | எனக்கென்று எப்போதும் நேரத்தை ஒதுக்குங்கள். நாம் அமர்ந்து பேசலாம், புத்தகம் படிக்கலாம் அல்லது வேறு ஏதாவது செய்யலாம். முக்கியமானது என்னவெனில் நீங்கள் என்னுடன் நேரத்தை செலவிடுவதை விரும்புகிறீர்கள் என்பதை நான் உணரவேண்டும். |
| 94 | Help me to pick out good books. | நல்ல புத்தகங்களை தேர்ந்தெடுக்க உதவுங்கள் |
| 95 | Don't make any promises you might not be able to keep. | உங்களால் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை செய்யாதீர்கள் |
| 96 | Take me with you to work. It helps me to understand who you are. | நீங்கள் வேலை செய்யும் இடத்திற்கு என்னை அழைத்துச் செல்லுங்கள். இது நீங்கள் யார் என்பதை நான் அறிந்து கொளள உதவும் |
| 97 | Occsionally watch my favourite T.V. shows with me. | எனக்குப் பிடித்தமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நான் பார்க்கும்போது, எப்பொழுதாவது நீங்களும் சேர்ந்து பாருங்கள் |
| 98 | I like it when you have fun with my friends and me. They usually don't see parents acting so crazy. | என்னுடனும் என் நண்பர்களுடனும் நீங்கள் வேடிக்கை செய்வதை நான் விரும்புகிறேன். அவர்கள் பெற்றோர் இவ்வளவு ஆர்வமுடன் இருப்பதை சாதாரணமாகப் பார்த்து இருக்கமாட்டார்கள் |
| 99 | Don't bottle up your problems. Share them. | உங்கள் பிரச்சனைகளை மூடிவைக்காதீர்கள். அவற்றை பகிர்நது கொள்ளுங்கள |
| 100 | Think of recreational things we can do together. | நாம் சேர்ந்து அனுபவிக்கும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை யோசித்து வையுங்கள் |
| 101 | Pets teach responsibility. | வளர்ப்புப் பிராணிகள் பொறுப்புணர்வை கற்பிக்கின்றன. |
| 102 | Whenever possible let us kids resolve our differences by ourselves. We need to learn to work things out for ourselves. We can't always rely on you to be around to solve every problem. | குழந்தைகளான நாங்கள் எங்களுக்கிடையேயான வேறுபாடுகளை நாங்களே தீர்த்துக் கொள்ள விடுங்கள். நாங்கள் எங்களுடைய வேலையை நாங்களே கற்றுக் கொள்ள வேண்டுகிறோம். எங்கள் ஒவ்வொரு பிரச்சனைகளை தீர்க்க உங்களையே சார்ந்து இருக்க முடியாது. |
| 103 | Compliment my friends | என் நண்பர்களை புகழ்ந்து பேசுங்கள் |
| 104 | Tell me about your disapointments. | உங்கள் ஏமாற்றங்களை என்னிடம் சொல்லுங்கள். |
| 105 | Don't spend all your time on the child who's acting up. Acknowledge the good as well as the bad. | உங்கள் நேரத்தை முழுவதும் குழந்தையின் நடவடிக்கையை மேற்பார்வையிடுவதில் செலவிடாதீர்கள். நன்மை, தீமைகளை ஏற்றுக் கொள்ளுங்கள் |
| 106 | Don't be sarcastic. | கேலி பேசாதீர்கள் |
| 107 | Teach me right and wrong. | சரியானவைகளையும் தவறுகளையும் எனக்குச் சொல்லி கொடுங்கள். |
| 108 | Allow me to use some of your valuable possessions like your camera. | உங்களிடம் உள்ள விலை மதிப்பு வாய்ந்த காமிரா போன்ற சாதனங்களை கையாளவிடுங்கள் |
| 109 | Help me to learn some world geography. I need to understand other people, other places. | நான் உலகப் புவியியல் கற்றுக்க கொள்ள உதவுங்கள். நான் பிற பகுதிகளையும்., பிற மக்களையும் அறிய விரும்புகிறேன். |
| 110 | Let me see you helping someone in need. | உதவி தேவைப்படுபவர்களுக்கு நீங்கள் உதவுவதையே நான் விரும்புகிறேன |
| 111 | Sometimes listen to my friends and me talking without adding your own opinion. | உங்களுடைய கருத்துக்களைத் திணிக்காமல் நானும் என் நண்பர்களும் பேசிக் கொள்வதை கவனமாகக் கேளுங்கள் |
| 112 | Show me how to compete. | போட்டியிடுவது எப்படி என்று கற்றுக் கொடுங்கள |
| 113 | Let's once in a while take turns reading out loud. | எப்பொழுதேனும் உரக்கப்படிக்க எங்களில் முறை ஏற்படுத்துங்கள |
| 114 | Teach me how to cook. | சமைக்க கற்றுக் கொடுங்கள் |

| | | |
|---|---|---|
| 115 | Keep chart of my accomplishments and achievements. | எனக்கு கிடைத்த பரிசுப் பொருட்கள், என் சாதனங்கள் பற்றிய பட்டியல் வைத்திருங்கள் |
| 116 | Try not to embarrass me by the way you dress. | நீங்கள் அணிந்து கொள்ளும் உடையால் எனக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தாதீர்கள |
| 117 | Let me choose my own friends. | என் நண்பர்களை நானே தேர்ந்தெடுக்க அனுமதியுங்கள |
| 118 | Answer my questions, even if the answer is embarrassing. | தர்ம சங்கடமான பதில்களாக இருப்பினும் என் கேள்விகளுக்குப் பதில் அளியுங்கள |
| 119 | Teach me to be a good winner and a good loser. | வெற்றி தோல்விகளை சமமாக பாவிக்க கற்றுக் கொடுங்கள். வெற்றியடையும்போது மமதை அடையாமலும், தோல்வியால் துவண்டு போகாமலும் இருக்க கற்றுக்கொடுங்கள் |
| 120 | Please don't yell at me when there's a problem. The less anger the easier it is to understand one another. | பிரச்சனை இருப்பின் என்மீது கோபப்படாதீர்கள். எவ்வளவு குறைவாக கோபப்படுகிறீர்களோ அந்த அளவிற்கு ஒருவரையொருவர் அறிய எளிதாக இருக்கும |
| 121 | The next time I have a day off from school, take a day off from work and spend the time with me. You can get to know me better. | அடுத்தமுறை எனக்கு பள்ளி விடுமுறை சமயம், நீங்களும் விடுப்பு எடுத்து, இருவரும் கலந்துரையாடலாம். இதனால் என்னை நீங்கள் மேலும் நன்றாக அறிந்து கொள்ளலாம் |
| 122 | When telling me about your rules, make sure I understand the consequences. | உங்கள் விதிமுறைகளைச் சொல்லும்பொழுது அதன் விளைவுகளையும் நான் நன்கு அறிந்துள்ளேனா என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள் |
| 123 | Even smart kids may made mistakes. I am smart, not perfect. | புத்திசாலித்தனமாக செயல்படும் குழந்தைகளும் தவறிழைக்கலாம். நான் கூர்மையான அறிவு கொண்டவனாயினும் குறைபாடற்றவனல்ல |
| 124 | Don't keep adding on punishments. Don't ground me and then decide that I also can't use the phone, and then that I also can't watch T.V. | மேலும் மேலும் தண்டனைகளைக் கூட்டிக் கொண்டே சென்று என்னைப் பயனற்றவனாக ஆக்காதீர்கள். |
| 125 | Keep encouraging me to read | படிக்கச் சொல்லி என்னை ஊக்கப்படுத்துங்கள |
| 126 | Remember that my room is the only Private place that I can call my own. If I don't want to keep it perfectly neat, let me. | எனக்குச் சொந்தமானது என்று சொல்லக்கூடிய தனிப்பட்ட இடம் என்னுடைய அறைதான் என்பதை நினைவு கொள்ளுங்கள். அதை நான் சுத்தமாக வைத்துக் கொள்ளவில்லையானாலும் அதை பொருட்படுத்தாதீர்கள் |
| 127 | Make up a list of my chores. That way I know exactly what I need to do and you won't have to keep reminding me. | நான் செய்யவேண்டிய வீட்டு வேலைகளைப் பற்றி பட்டியல் இடுங்கள். அதன்படி நிச்சயமாக நான் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வேன். நீங்கள் அடிக்கடி அதை நினைவூட்ட வேண்டியிராது |
| 128 | Teach me about love and affection. | அன்பு, பாசம் பற்றி எனக்கு கற்பியுங்கள் |
| 129 | Help me plan ahead. High School will be scary enough even with a plan. | திட்டமிட்டு செய்தாலும் உயர் பள்ளிக் கூடம் , கல்லூரி என்னை கிலி அடையச் செய்யும். எனவே முன்னதாகவே திட்டமிட உதவுங்கள |
| 130 | Introduce me to lots of defferent things. Even if I never want to do something again, you have given me the experience. | பல்வேறு விஷயங்களை நான் அறியச் செய்யுங்கள். நான் சிலவற்றை எப்பொழுதும் மீண்டும் செய்ய வேண்டி இருக்காவிட்டாலும், நீங்கள் எனக்கு அனுபவம் கொடுத்ததாக இருக்கும். |
| 131 | Try to remember what it was like being my age. | என்னுடைய இந்த வயதில் என் மனநிலை, எதிர்பார்ப்பு எப்படி இருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள் |
| 132 | Teach me how to relax. | மனமகிழ்வுடன் ஓய்வாக இருப்பது எப்படி என்பதை கற்றுக் கொடுங்கள |
| 133 | Teach me to pray about my problems. | என்னுடைய பிரச்சனைகளுக்காகப் பிரார்த்தனை செய்ய கற்றுக் கொடுங்கள் |
| 134 | Give me enough pocket money so that I can learn how to spend wisely and how to save. | எனக்கு வேண்டிய அளவு கைச்செலவு பணம் கொடுங்கள். அதனால் பணத்தை எப்படி செலவிடுவது என்றும் எப்படி சேமிப்பது என்றும் நான் தெரிந்து |

| | | |
|---|---|---|
| | | கொள்வேன் |
| 135 | If you must fight, remember that I am close enough to hear you. | பெற்றோர்கள் நீங்கள் இருவரும் சண்டை சச்சரவுகளில் ஈடுபடும்போது, நாங்கள் அருகிலேயே இருக்கும்போது அதன் பாதிப்பு எங்களுக்கு ஏற்படும் என்பதை நினைவு கொள்ளுங்கள் |
| 136 | Don't be so overprotective. If I am not allowed to make mistakes, I can't learn from my mistakes. | என்னை அதிக அளவு பாதுகாக்க வேண்டாம். நான் தவறுகளைச் செய்ய அனுமதிக்கப்படாவிட்டால் என் தவறுகளிலிருந்து நான் பாடம் கற்றுக் கொள்ள முடியாது |
| 137 | Don't judge my friends by their clothes or hair. After all, I saw something in them that made me want their friendship. | வெளித்தோற்றத்தை மட்டுமே பார்த்து எனது நண்பர்களை அலட்சியப்படுத்தாதீர்கள் |
| 138 | I like the little private notes you sometimes leave me. | சில சமயங்களில் எனக்காக நீங்கள் விட்டுச் செல்லும் சிறிய தனிப்பட்ட குறிப்புகளை நான் விரும்புகிறேன |
| 139 | Help me with my homework when I need you to. | நான் கேட்கும்பொழுது என் வீட்டுப் பாடங்களைச் செய்ய உதவுங்கள் |
| 140 | If I come home late, I might have a good reason. Ask for it before you get upset. | நான் வீட்டுக்கு வர தாமதமானால் அதற்கு காரணம் இருக்கும். நீங்கள் கோபப்படுவதற்கு முன் என்னிடம் அதைப் பற்றி கேளுங்கள் |
| 141 | Teach me to be kind. | அன்பாக நான் நடந்து கொள்ள கற்றுக் கொடுங்கள் |
| 142 | Don't punish me if I don't do well in school. Instead, work with me to improve. | நான் பள்ளியில் சிறக்கவில்லை என்பதற்காக என்னைத் தண்டிக்காதீர்கள். பதிலாக என்னுடன் சேர்ந்து நான் முன்னேற்றமடைய உதவி செய்யுங்கள் |
| 143 | I am no longer the little child you think of me as, but I am also not as grown-up as I like to pretend. | நீங்கள் நினைப்பதைப் போல் இன்னும் நான் அவ்வளவு சிறிய குழந்தை அல்ல. ஆனால் நான் பாவனை செய்வதைப்போல் அவ்வளவு முதிர்ச்சியானவன் அல்ல |
| 144 | Talk to me about god. | கடவுளைப் பற்றி என்னுடன் கலந்து விவாதியுங்கள் |
| 145 | Encourage me to use a computer. I'll be glad later. | நான் ஒரு கம்ப்யூட்டரை பயன்படுத்த ஊக்கப்படுத்துங்கள். பிற்காலத்தில் அது எனக்கு பயனுள்ளதாக இருக்கும். |
| 146 | When I ask a question, make sure I understand your answer. | நான் ஒரு கேள்வியைக் கேட்டால், உங்களின் பதிலை முழுமையாக நான் புரிந்து கொண்டேன் என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள். |
| 147 | Hire someone to do your taxes. Every year the whole family gets upset because you are so worried until they are done. | உங்கள் வரிகளை கணக்கிட வேலையாளை அமர்த்திக் கொள்ளுங்கள். ஏனெனில் அவை முடியும்வரை நீங்கள் மிக்க கவலையுடன் இருப்பது குடும்பம் முழுவதையும் பாதிக்கிறது. |
| 148 | Don't bring up past mistakes. Forgive and forget. | முன்னால் நான் செய்த தவறுகளை நினைவூட்டாதீர்கள். மன்னித்து மறந்து விடுங்கள் |
| 149 | Don't automatically blame until you know the facts. | உண்மைகளை நீங்கள் நன்கு முற்றும் உணராமல் குற்றங்களை சுமத்தாதீர்கள |
| 150 | Take me to the hospital sometimes when you visit friends who are ill. It makes me appreciative of good health. | உங்கள் நண்பர்கள் நோயுற்றிருக்கும் சமயங்களில் மருத்துவமனைக்குச் செல்லும்பொழுது என்னையும் அழைத்துச் செல்லுங்கள். இதனால் நல்ல ஆரோக்கியத்தை சரியாக அறிந்து கொள்ளக்கூடிய தன்மை ஏற்படுகிறது |
| 151 | Believe in me. | என்னிடத்தில் நம்பிக்கை வையுங்கள் |
| 152 | Assist with my chores when I ask for help. | எனது வீட்டு வேலைகளில் உங்களிடம் உதவி கேட்கும்பொழுது எனக்கு உதவுங்கள் |
| 153 | Help me to get organised. | நான் எதையும் ஒழுங்காகச் செய்ய உதவுங்கள் |
| 154 | Listed to my music with me occasionally. | எப்பொழுதாவது என் இசையை என்னுடன் சேர்ந்து கேளுங்கள் |
| 155 | Teach me to respect elders. | பெரியோர்களை மதிக்கக் கற்றுக் கொடுங்கள் |
| 156 | A clothes allowance teaches me to make good choices and saves us all | உடைகளுக்காக நீங்கள் கொடுக்கும் பணம் விருப்பமானவற்றை தேர்ந்தெடுக்க உதவுகிறது. நம் |

| | | |
|---|---|---|
| | hassles. | வேண்டாத விவாதங்களையும் தடுக்கிறது |
| 157 | When I have a bad attitude or do something mean, tell me. | தவறான செய்கைகளைச் செய்தாலோ அல்லது உங்களுக்கு அவ்வாறு தோன்றினாலோ என்னிடம் சொல்லுங்கள் |
| 158 | Never let me smoke. | நான் புகைபிடிக்க அனுமதிக்காதீர்கள் |
| 159 | Pay my allowance on a regular basis. Don't make me have to ask for it. | என் உதவித் தொகைகளை உரிய காலங்களில் அளியுங்கள். அதை நான் கேட்கும்படியாக வைத்துக் கொள்ள வேண்டாம். |
| 160 | Listen to my jokes and experiences in classroom. | நான் சொல்லும் தமாஷ்களையும் என் பள்ளிக்கூட அனுபவங்களையும் கேளுங்கள |
| 161 | Don't assume my teen years will be a hassle. You might actually enjoy me as a teenager. | என்னுடைய இளமைப் பருவம் பிரச்சனையானதாக நினைத்துக் கொள்ளாதீர்கள். அந்தப் பருவத்தில் நீங்கள் உண்மையில் என்னை ரசிக்கலாம். |
| 162 | Have a set time for us to do family chores. | வீட்டு வேலைகளைச் செய்ய குறிப்பிட்ட நேரத்தை நமக்கு ஒதுக்குங்கள் |
| | | |
| 163 | I like it when you play practical jokes on us. | எங்களை கேலி செய்து நீங்கள் விளையாடுவதை நான் விரும்புகிறேன |
| 164 | Look at family photo albums with me and tell me about the relatives. | குடும்ப புகைப்படத் தொகுப்பை காண்பித்து எனக்கு நம்முடைய உறவினர்களைப் பற்றிக் கூறுங்கள் |
| 165 | Don't always let me win when we play games or sports. | நாம் சாதாரண முறையில் விளையாடும்போதும் போட்டி வைத்து விளையாடும் போதும் என்னையே வெற்றி பெற வைக்காதீர்கள். |
| 166 | Don't shout to make a point. | ஒன்றை விளக்கச் செய்வதற்காக கத்தாதீர்கள் |
| 167 | Never call me stupid or dumb. | என்னை முட்டாள் என்றோ ஊமை என்றோ அழைக்காதீர்கள் |
| 168 | Encourage me to exercise regularly. | தேகப் பயிற்சி ஒழுங்காகச் செய்துவர ஊக்கப்படுத்துங்கள் |
| 169 | Even when I do something wrong, let me know you love me. | நான் ஏதாவது தவறு செய்தாலும் நீங்கள் என்மீது அன்பாக இருப்பதை அறியச் செய்யுங்கள் |
| 170 | Don't set unrealistic goals. | யதார்த்தமில்லாத இலக்குகளை வைக்காதீர்கள் |
| 171 | Sometimes I just want to be left alone. | சில சமயங்களில் நான் தனிமையாக இருக்க விரும்புகின்றேன் |
| 172 | Control the amount of time I play video games. | என்னுடைய வீடியோ விளையாட்டிற்கான நேரத்தை கட்டுப்படுத்துங்கள |
| 173 | I like it when you have fun with me. | நீங்கள் என்னுடன் சிரித்து மகிழ்வதை விரும்புகிறேன் |
| 174 | Thank me and point it out when I am polite. | மற்றவர்களிடம் மரியாதையுடன் நடந்துகொள்ளும் போது அதை குறிப்பிடுவதுடனும் நன்றியும் தெரிவியுங்கள் |
| 175 | Allow me to keep some of my money in a safe, secret place. | என்னுடைய பணத்தில் ஒரு பகுதியை பத்திரமாக ரகசியமான இடத்தில் சேமித்து வைக்க அனுமதியுங்கள் |
| 176 | Make sure that I understand the meaning behind the words on my posters and T-shirts | நான் வைத்திருக்கும் போஸ்டர், ஙகூங சட்டைகள் ஆகியவற்றில் உள்ள வார்த்தைகளன் பொருளை நான் அறிந்துள்ளேனா என்று உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள் |
| 177 | Ask my opinion sometimes. | என்னுடைய கருத்துக்களை சில நேரங்களில் கேட்டு அறியுங்கள் |
| 178 | Let yourself be a parent, not a policeman. | நீங்கள் பெற்றோரைப்போல் நடந்து கொள்ளுங்கள். காவல்காரனைப் போல நடக்காதீர்கள் |
| | | |
| 179 | Spread your love around. Give equal attention to each child in the family. | உங்கள் அன்பை எல்லோருக்கும் அளியுங்கள். குடும்பத்தின் ஒவ்வொரு குழந்தை மீதும் சம அளவு அக்கறை கொடுங்கள |
| 180 | Remember that even though I don't always say it, I appreciate all you do for me. | நான் சொல்லாவிட்டாலும் நீங்கள் எனக்காக செய்யும் அனைத்தையும் மதித்து பாராட்டுகிறேன் என்பதை நினைவு கொள்ளுங்கள். |